சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 6/2016

பெயர் திரு. சுரேஷ் த/பெ. நாள். 15.09.2025

**வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1, 2 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) வழக்குச் சொத்துக்கள் ராமசாமியின் பூர்வீக சொத்துக்கள் என்று கூறிதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ராமசாமிக்கு சுமார் 40 ஏக்கர் சொத்துக்கள் இருக்கும் என்றால் இருக்கலாம். ராமசாமியின் சொத்துக்களை 1946ல் அவருடைய இரண்டு மகன்களான ராஜரத்தினம் மற்றும் கிருஷ்ணசாமி ஆகியோர் பிரித்துக் கொண்டனர் என்றால் சரிதான். அதன் படி 12.06.1946 ஓர் கூர்சீட்டு எழுதிக் கொடுத்தனர் என்றால் சரிதான். வழக்குச் சொத்துக்கள் ராமசாமிக்கு கிடைக்கப்பெற்ற சொத்துக்கள் என்றால் சரிதான். அந்த கூர்ச்சீட்டில் ராமசாமிக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் அவரது காலததிற்கு பிறகு அவரது மகள்களான சரஸ்வதி மற்றும் மாணிக்கவள்ளி அடைய வேண்டியது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் தாத்தா ராஜரத்தினம் மற்றும் கிருஷ்ணசாமி ஆகியயோருக்கு அந்த கூர்ச்சீட்டில் தலா 20 ஏக்கர் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். என் தாத்தா ராஜரத்தினத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். ஏன் சேர்க்கவில்லை என்றால் என் தாயார் காமாட்சி தேவி மற்றும் என் மாமா சீனிவாசன் ஆகியோர் அவர்களுக்குள் வாய் மொழியாக பிரித்துக் கொண்டதால் அதனை சேர்க்கவில்லை.

2) 1, முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் 5, 6 பிரதிவாதிகள் 26.10.2006ல் 4ம் பிரதிவாதிக்கு கொடுத்த கிரயம் தவறு என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த கிரயம் எங்களுக்கு தெரியாமல் கொடுக்கப்பட்டது. எங்களை ஏமாற்றி அதில் கையெழுத்து பெறப்பட்டதாகும். என் தாயார் ஒவ்வொரு வருடமும் என் மாமா வீட்டிற்கு செல்வார், அவ்வாறு செல்லும்பொழுது பட்டா மாற்றம் செய்ய வேண்டும்

என்று என் தாயாரிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். 26.10.2006ல் கிரய ஆவணம் எழுதப்பட்ட பிறகு ஒரு மாதத்தில் அவ்வாறு என் தாயாரை ஏமாற்றி கையொப்பம் வாங்கிக் கொண்டதை தெரிந்து கொண்ட நான் செய்யூர் சார் பதிவகம் சென்று ஆவணத்தை எடுத்துப் பார்த்து குடும்ப உறுப்பினர்களிடம் பேசினேன். அவர்கள் சொத்தை அல்லது அதற்கு ஈடான தொகையை வாங்கித் தருவதாக கூறி காலம் தாழத்தி வந்தார்கள். நான் மற்றும் என் தாயார் ஆகியோர் இன்று வரை ஒன்றாகத்தான் உள்ளோம் என்றால் சரிதான். என் தாயாரை ஏமாற்றி கையெழுத்து வாங்கிய விவரம் என் தாயாருக்கு தெரியும். அவர் சொல்லிதான் எனக்கு தெரியும்.

3) என் தாயாரை அவ்வாறு ஏமாற்றி கையொப்பம் வாங்கியதாகக் கூறுவதற்கு காவல் நிலையம் அல்லது நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தாரா என்றால் அனைவரும் உறவினர்கள் என்பதாலும், சொத்து அல்லது தொகை தருவதாக கூறியதாலும் வழக்கு தாக்கல் செய்யவில்லை. நானும், 2ம் வாதியும் மட்டுமே காமாட்சி தேவியின் வாரிசுகள் ஆவோம். 7 முதல் 9 பிரதிவாதிகள் என் மாமா சீனிவாசனின் வாரிசுகள் ஆவர். நான், 2ம் வாதி மற்றும் 7 முதல் 9 பிரதிவாதிகள் இதே வழக்குச் சொத்தைப் பொறுத்து பாகப்பிரிவினை கோரி மு.வ. 65/2010 வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அவ்வழக்கை என் மாமா முழுவதும் பார்த்துக் கொண்டதால் நாங்கள் ஆஜராகவில்லை. அதனால் ஒரு தலைபட்ச தீர்ப்பு வழங்கப்பட்டது. அதன் பேரில் இவ்வழக்கில் மேல்முறையிடுவதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம். அவ்வழக்கு 19.11.2014ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதிலிருந்து சுமார் 6 மாத காலத்திற்குள் அந்த தீர்ப்பு பற்றி எனக்கு தெரியவந்தது. அந்த தீர்ப்பை ரத்து செய்ய மனு தாக்கல் செய்யவில்லை. ஏன் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் என் மாமா அந்த வழக்கை தாக்கல் செய்ததால் நாங்கள் வேறு வழக்கறிஞரை அணுகி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம்.

4) 1946 கூர்ச்சீட்டுப்படி வழக்குச் சொத்துக்கள் ராமசாமிக்கு ஒதுக்கப்பட்டு

அவரது காலத்திற்கு பிறகு அவரது மகள்கள் மாணிக்கவள்ளி மற்றும் சரஸ்வதி ஆகியோர் அடைய வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. சரஸ்வதி வாரிசு ஏதும் இன்றி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதன் பின்னர் மாணிக்கவள்ளி வழக்குச் சொத்தை முழு உரிமையாக அடைந்து 6.3.1997 அன்று 4ம் பிரதிவாதிக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. உயில் படி 4ம் பிரதிவாதிக்கு சொத்துக்கள் உரிமையாகி இருந்தாலும், அதனை ஊர்ஜிதம் செய்ய மற்றும் பட்டா மாற்றம் செய்ய 1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் 5, 6 பிரதிவாதிகள் 4ம் பிரதிவாதிக்கு கிரயத் தொகையை பெற்றுக் கொண்டு வழக்குச் சொத்தைப் பொறுத்து கிரயம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அந்த கிரயத்தை ஒப்புக் கொண்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் தாயாருக்கு, அவர் தந்தை மூலம் கிடைத்த சொத்துக்களில் அவர் உயிருடன் இருக்கும் வரை நான் பாகம் கோர இயலாது என்றால் சரியல்ல. அவர், வழக்குச் சொத்தை கிரயம் கொடுத்ததால் வழக்குச் சொத்தில் நான் பாகம் கோர இயலாது என்றாலும் சரியல்ல. வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.